மலர் 14 இதழ் 14

NAVAMANI (Tamil Daily) MADRAS.

REGD. NO.

Phone No. 70190, 70191

தினசரி 15 காசு விமானப் பதிப்பு 18 காசு

இந்திரா மீது
அசோக்மேத்தா
குற்றச்சாட்டு

—2-ம் பக்கம்

நவமணி

கூட்டுறவு முறையில் தொழிலாளர்கள் நடத்தும் ஒரே தமிழ்த் தினசரி

சென்னை 22—9—73 சனி

[illegible]யூர் 23—9—73 ஞாயிறு

திருவள்ளூரில் பழைய காங்கிரஸ் ஊர்வலம்

(நவமணி சிறப்புச் செய்தியாளர்)

திருவள்ளூர், செப். 22—பழைய காங்கிரஸ் மாநாட்டையொட்டி இன்று திருவள்ளூரில் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்திற்கு தமிழ்நாடு [illegible] காங்கிரஸ் தலைவர் கக்கன் தலைமை வகித்தார்.

சரியாக காலை 10-30 மணிக்கு சக்காடு கண்டிகையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது.

அங்கிருந்து மாநாடு நடக்கும் திருவள்ளூர் பெரியகுப்பம் 5 மைல் தூரத்தில் உள்ளது.

திருவள்ளூர் நகர பழைய காங்கிரஸ் கட்சித் தலைவர் குதிரையில் அமர்ந்து பழைய காங்கிரஸ் கொடியைப்பிடித்தபடி முன்னால் சென்றார், பேண்டு வாத்தியம் முழங்கியது.

தலைவர்களும், ஆயிரக்கணக்கான தொண்டர்களும் நடந்து வந்தனர்.

மாட்டு வண்டிகளில் கிராமப் பகுதியிலிருந்து பலர் குடும்பம் குடும்பமாக வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

அதன் பின்னால் சைக்கிள்களில் ஆயிரக்கணக்கான பழைய காங்கிரஸ் தொண்டர்கள் கொடியைக் கட்டிக்கொண்டு வந்தனர்.

ஊர்வலத்தில் 100க்குமேற்பட்ட லாரி, டிராக்டர்கள் வரிசையாக வந்தன.

ஒரு லாரியில் சாராயக் கடைபோல் அமைத்து குடித்துவிட்டு மக்கள் கெடுவது [illegible] சித்தரித்திருந்தனர்.

பேண்டு, நாதசுரம், பொய்க்கால் குதிரை ஆட்டம், உறுமி மேளம் நடனம், உடுக்கு அடித்துக்கொண்டு ஆட்டம், சிலம்பாட்டம் இவைகளுடன் திருவள்ளூர் நகரின் முக்கிய வீதிகளின் வழியே ஊர்வலம் மாநாடு நடைபெறும் அன்னை சிவகாமி அரங்கத்திற்கு இன்று பிற்பகல் வந்து சேர்ந்தது.

திருவள்ளூர் நகரம் முழுதும் எங்கு பார்த்தாலும் தோரணங்களும், அலங்கார வளைவுகளும் காட்சியளித்தன. நகரமே விழாக்கோலம் கொண்டிருந்தது.

ஊர்வலத்தில் கக்கன் ஒரு காரில் வந்தார்.

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் [illegible]ராமச்சந்திரன், குமரி ஆனந்தன், தண்டாயுதபாணி ஆகியோர் நகரின் முக்கியமான இடத்தில் இருந்து ஊர்வலத்தைப் பார்வையிட்டனர்.

சிவாஜி

இன்று மாலை விவசாயிகள் மாநாட்டை [illegible] கனகாம்புஜம்மாள் துவக்கிவைக்கிறார். வி.பி.வெங்கடேஸ்வரலு தலைமை வகிக்கிறார்.

நடிகர் சிவாஜிகணேசன் கலந்துகொண்டு பேசுகிறார்.

காமராஜ்

[illegible]ல் மாநாட்டில் காமராஜும் மற்றும் பழைய காங்கிரஸ் தலைவர்களும் பேசுகின்றனர்.

தி.மு.க. மீது கக்கன் தாக்கு

வடக்கு செங்கற்பட்டு மாவட்ட விவசாய அரசியல் மாநாடு திருவள்ளூரில் இன்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் முதல் நாள் நிகழ்ச்சியாக தமிழ்நாடு பழைய காங்கிரஸ் முன்னாள் தலைவர் கக்கன் கொடியேற்றி வைத்தார். அப்போது தி.மு.க. அரசை அவர் கடுமையாகத் தாக்கிப் பேசினார். அவர் கூறியதாவது:

காந்தியார், திருப்பூர் குமரன் போன்றோர் கைகளால் பிடித்து ஏற்றிவைக்கப்பட்ட கொடியை இன்று நான் என் கரங்களால் ஏற்றிவைக்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டம், சுதந்திரப் போராட்டத்தில் பெரும் பங்கு வகித்திருக்கிறது. பெரும் தியாகிகளைத் தந்திருக்கிறது. எப்பொழுதும் காங்கிரஸ் கட்சியின் பக்கமே செங்கற்பட்டு மாவட்டம் இருந்து வந்தது.

ஆனால் இடையில் தி.மு. கழகத்தினர் இல்லாததும் பொல்லாததுமாகச் சொல்லி மக்களை ஏமாற்றி விட்டார்கள்.

தேர்தலுக்கு முன்பு, "நாங்கள் வந்தால் ஒரு படி, வந்தவுடன் 3 படி அரிசி அளப்போம்" என்றார்கள். "வரியைக் குறைப்போம்" வசதிகளைப் பெருக்குவோம் என்று என்னென்னவோ கூறினார்கள்.

இப்படி இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி எப்படியோ ஆட்சிக்குவந்து தமிழகத்தினுடைய பெருமையை இழக்கச் செய்து விட்டார்கள். தமிழகத்துக்கும் மக்களுக்கும் தி.மு. கழகத்தினர் பெரும் தீங்கு செய்து விட்டார்கள்.

இளைஞர்களுக்கு அழைப்பு

தாய்மார்களும் இளைஞர்களும் காங்கிரஸ் பக்கம் வர வேண்டும். இளைஞர்கள் காங்கிரசின் வெற்றிக்கும் எதிர்கால இந்தியாவை உருவாக்கவும் முன்வர வேண்டும்.

இவ்வாறு கக்கன் பேசும்போது குறிப்பிட்டார்.

அணிவகுப்பு மரியாதை

[illegible] மேடை அருகே சேவாதளப் பெண் தொண்டர்களும் ஆண் தொண்டர்களும் அணி வகுத்து மரியாதை செலுத்தினார்கள். மதன்ராஜ், நாராயணசாமி, தண்டாயுதபாணி அப்பாசாமி, கமலாம்புஜ அம்மாள் ஆகியோரும் அணிவகுத்து நின்றனர். மேளவாத்தியங்களும், அதிர்வேட்டுகளும் முழங்கின. கக்கன் கொடியேற்றி வைத்தார்.

வடமேற்குக்குழுத் தலைவர் சி. [illegible] சீவலு நாயுடு கக்கனுக்கு கதராடை அணிவித்தார்.

ஆப்கன் அரசை கவிழ்க்க முயற்சி

மாஸ்கோ, செப். 22—ஆப்கானிஸ்தான் குடியரசை கவிழ்க்க நடைபெற்ற சதி ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாகவும், இது சம்பந்தமாக பிரபலமான பலரும் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், ரஷ்ய செய்தி ஸ்தாபனமான டாஸ் தெரிவித்தது.

ஆப்கானிஸ்தான் விமானப் படைத்தலைவர், ஜெனரல் அப்துல் ரெஜாக், முன்னாள் பிரதமர் மீவண்ட்வல், நன்ஹார், மாகாண கவர்னர் கான் முகம்மது ஆகியோர் கைதானவர்களில் முக்கியமானவர்களாவர் என்று, ஆப்கன் செய்தி கூறுவதாக டாஸ் தெரிவித்தது.

பிற்போக்குக் கும்பல் ஒன்று, நாட்டின் முற்போக்கு—புரட்சி இயக்கத்தை ஒழித்துக்கட்ட முயன்று வருவதாக ஆப்கன் செய்திகள் கூறின.

ஆயினும், ராணுவம் அரசுக்கு விசுவாசமாக இருந்து வருவதாகவும், நாடுபூராவும் சகஜ நிலைமையில் இருப்பதாகவும், அந்தச் செய்திகள் கூறின.

தற்போதைய ஆப்கன் ஆட்சியை கவிழ்க்க பாகிஸ்தான் சதி செய்வதாக, ஆப்கன் அரசு நேற்று குற்றஞ் சாட்டியது.

மைசூரில் துப்பாக்கி சூடு

பங்களூர், செப். 22—பெங்களூரில் இருந்து 250 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள மதுகிரி என்னுமிடத்தில் கல்வீச்சில் ஈடுபட்ட மாணவர்களைக் கலைக்க போலீசார் வானத்தில் துப்பாக்கியால் சுட்டனர்.

சுமார் 2 ஆயிரம் மாணவர்கள் தடையை மீறி, உணவுக் கிடங்குகளை நோக்கிவந்ததாக செய்திகள் கூறின.

சப்-இன்ஸ்பெக்டர் உட்பட 8 போலீசார் காயமடைந்ததாகவும் 28 பேர் கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

ஜனசங்க போராட்டம்

பாட்னா, செப். 22—விலை உயர்வைக் கண்டிக்கும் வகையில் பீகாரில் நேற்று 5-வது நாளாக மாநிலம் முழுவதிலும் போராட்டம் நடந்தது. இந்தப் போராட்டத்தில நேற்று மட்டும் சுமார் 1,700 பேர் கைது செய்யப்பட்டனர்.



காஞ்சிபுரத்தில் சரிகை ஆலையை மந்திரி மாதவன் திறந்துவைத்தார். (செய்தி: 2-ம் பக்கம்).

மைசூர் அரசு ஊழியர் பஞ்சப்படி உயர்கிறது

பெங்களூர், செப். 22—மைசூர் அரசு ஊழியர்களின் கிராக்கிப்படியை, மத்திய அரசு ஊழியர்களின் கிராக்கிப்படிக்கு இணையானதாக உயர்த்துவதற்கு மைசூர் அரசு முடிவு செய்துள்ளது. இந்த ஆண்டு மே, 1-ந் தேதி முதற்கொண்டே இந்த உத்தரவு அமுலுக்கு வருகிறது.

இத்தகவலை, மைசூர் நிதி மந்திரி எம்.ஒய். கோர்பாடே நேற்று மைசூர் அசெம்பிளியில் அறிவித்தார்.

ரூ. 7 முதற்கொண்டு ரூ. 10 வரையில் [illegible] கிராக்கிப்படி உயர்வு இருக்கும். [illegible]தனால் மூன்றரை லட்சம் ஊழியர்கள் பயனடைவர்.

இந்திரா மின்னல் வேக சுற்றுப்பயணம்

புதுடெல்லி, செப். 22—பிரதமர் இந்திரா காந்தி அடுத்த ஒன்றரைமாத காலத்திற்குள் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் மின்னல்வேகத்தில் சுற்றுப் பிரயாணம் செய்ய திட்டமிட்டுள்ளார்.

இந்த மாதம் 24 அல்லது 25-ந் தேதியிலிருந்து 4 அல்லது 5 தினங்களுக்கு அவர் காஷ்மீரில் சுற்றுப்பிரயாணம் செய்வார். 29-ந் தேதியன்று அமிர்[illegible] நகருக்கு விஜயம் செய்வார்.

அக்டோபர் முதலாவது வாரத்தில் உத்தர பிரதேசத்தில் அவர் 2 நாள் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

5-ந் தேதியிலிருந்து 7-ந் தேதிவரை இமாசல பிரதேசத்தில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

அஸ்ஸாம், ஒரிசா, உத்திர பிர[illegible]ம், கேரளம், மைசூர், குஜராத் ஆகிய மாநிலங்களிலும் இன்னும் சுமார் ஒரு மாதகாலத்தில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்வார்.

சென்னையில் வாலிபர் மர்மக்கொலை

சென்னை, செப். 22—ஒரு வாலிபர் கொலை செய்யப்பட்டு கிடந்தார். இந்த சம்பவம் சென்னை நகரில் நடந்தது.

அந்த வாலிபரின் பெயர், அடையாளம் தெரியவில்லை. அவர் கொலை செய்யப்பட்டதன் காரணமும் தெரியவில்லை.

சென்னை மிருகக் காட்சி சாலை அருகே பார்க் ரோடில் அந்த வாலிபர் இறந்துகிடந்தார். அவருக்கு 30 வயது இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது.

அந்த வாலிபரின் வலது மார்பில் கத்திக்குத்து காயம் காணப்பட்டது.

அந்த வாலிபர் மொட்டையடித்திருந்தார். புஷ்கல[illegible] பனியன், ஜட்டி ஆகியவைகளை அணிந்திருந்தார். அருகே ஒரு வேட்டி கிடந்திருந்தது.

அவர் ஆந்திராவைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அந்த வாலிபர் கொலை செய்யப்பட்டது பற்றி தகவல் கொடுப்பவருக்கு தக்க சன்மானம் வழங்கப்படும் என்று போலீசார் அறிவித்து இருக்கிறார்கள்.

ரத்தக்கறை சட்டை

வாலிபரின் பிணத்துக்கு அருகே ஒரு கைக்கடிகாரம், கருப்புக் கண்ணாடி ஆகியவை கிடந்தன.

போலீசார் அந்த வட்டாரத்தில் சோதனை நடத்தி பார்த்ததில், ரத்தக்கறை படிந்த வெள்ளைச் சட்டை ஒன்று கைப்பற்றப் பட்டது.

துணை போலீஸ் கமிஷனர் பி. துரை, உதவி போலீஸ் கமிஷனர் துக்காராம் ஆகியோர் அந்த இடத்திற்குப் போய் பார்வையிட்டனர்.

துப்பறியும் நாய்

இந்தக் கொலை பற்றி துப்பு துலக்குவதில் துணை புரிவதற்காக போலீஸ் துப்பறியும் நாய்கள் வரவழைக்கப்பட்டன.

குற்ற ஆய்வு இயல் நிபுணர்களும் வரவழைக்கப்பட்டார்கள்.

ரூ. 7 கோடியில் சபரிமலை அபிவிருத்தி

கொச்சி, செப். 22—லட்சக் கணக்கான பக்தர்கள் ஆண்டுதோறும் சென்று தரிசித்துவரும் ஐயப்ப சுவாமி இருக்கும் சபரிமலையை அபிவிருத்தி செய்ய ஒரு பெரிய திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதில் முதல் கட்டமான ரூ. 7 கோடி திட்டத்து[illegible] மத்திய அரசு அங்கீகாரம் அளித்திருக்கிறது.

சபரி மலை அபிவிருத்திக்கான பெரிய திட்டத்தை நிறைவேற்றுவதில் 75 சதவிகிதம் அரசாங்கம் நிதி உதவி அளிக்கும். மீதமுள்ள 25 சதவிகித[illegible] திருவாங்கூர் தேவஸ்வம் போர்டு ஏற்க வேண்டும்.

சபரி மலைக்கு நல்ல வசதி, [illegible]லை அபிவிருத்தி [illegible] யாத்திரிகர்களுக்கு அதிக [illegible] வசதி அளிப்பது சபரிமலை திட்டத்தின் நோக்கம்.

குறைந்த விலையில் 500 டன் தண்டவாளக் கம்பிகள் வழங்கத் தென் ரெயில்வே சம்மதித்திருக்கிறது. அது வந்தவுடன், சபரி குன்றை பம்பை ஆற்றுடன் இணைக்கும் கயிற்று ரெயில் போடப்படும். சபரி குன்றிலிருந்து 3 கிலோமீட்டர்கீழ் பம்பை ஆறு இருக்கிறது.

முந்திய ஆண்டுகளைப் போலவே இந்த ஆண்டிலும் கோவிலில் கோடி அர்ச்சனை நடத்தப்படும் என்ற தகவலை தேவஸ்வம் போர்டு தலைவர் மாதவன் நாயர் தெரிவித்தார்.

இசைக் கருவி தயாரிக்க அரசாங்க பயிற்சி நிலையம்

தஞ்சாவூர், செப். 22—இசைக் கருவிகளைத் தயாரிப்பதற்காக பயிற்சி நிலையம் [illegible]றை அமைக்க தமிழ்நாடு அரசு [illegible]துள்ளது. இந்த பயி[illegible] நிலையம் தஞ்சாவூரில் அமைக்கப்படும்.

தொழில் இலாகா [illegible]ராந்திய துணை இயக்குனர் எஸ். கே. ஆலாலசுந்தரம் இந்த தகவலை வெளியிட்டார்.

தற்போது உள்ள இசைக் கருவிகள் கூட்டுறவு சங்கம், இசைக் கருவிகளுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலவில்லை என்றும் அவர் சொன்னார்.

சினிமா செய்திகள்

—4-ம் பக்கம்

ஜனாதிபதி மதுரை விஜயம்

மதுரை, செப். 22—ஜனாதிபதி கிரி அடுத்த ஜனவரி மாதத்தில் மதுரைக்கு விஜயம் செய்வார். அங்கு அவர் 3 நாள் தங்கியிருப்பார். ஜனவரி 4-ந் தேதியன்று மதுரையில் ரோட்டரி சங்க மாநாட்டை அவர் துவக்கிவைப்பார்.

ராதாகிருஷ்ணன் உடல நிலை: காமராஜ் பார்த்தார்

சென்னை, செப் 22—முன்னாள் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனின் உடல்நிலை திருப்திகரமான முறையில் அபிவிருத்தி அடைந்துவருகிறது என்று அவருடைய அந்தரங்க செயலாளர் இன்று கூறினார்.

பழைய காங்கிரஸ் தலைவர் காமராஜர் இன்று ஆஸ்பத்திரியில் ராதாகிருஷ்ணனைச் சந்தித்து அவருடைய உடல் நிலை பற்றி விசாரித்தார்.

சிலியுடன் உறவை முறிக்க ரஷ்யா முடிவு

மாஸ்கோ, செப். 22—சிலி நாட்டுடன் ராஜதந்திர உறவை முறித்துக்கொள்வதாக, ரஷியாவும், கிழக்கு ஜெர்மனியும் அறிவித்தன.

சிலியில் வலதுசாரி ராணுவத்தினர் புரட்சி செய்து ஆட்சியைக் கைப்பற்றிய 10 நாட்களுக்குப் பிறகு ரஷியாவும், கிழக்கு ஜெர்மனியும் இந்த முடிவை மேற்கொண்டன. ரஷியாவில் உள்ள தூதரகத்தை மூடி நாடு திரும்புமாறு சிலி நாட்டுத் தூதுவரிடம் நேற்று ரஷியா கூறியது.

கிழக்கு ஜெர்மனியும், உறவை முறித்துக் கொள்வதாக நேற்று அறிவித்தது.

ரெயிலில் அனுமதியின்றி வியாபாரம்: 73 பேர் மீது நடவடிக்கை

சென்னை, செப். 22—ரெயில்களில் அனுமதியின்றி வியாபாரம் செய்ததாகவும், ரெயில் போகும்போது இறங்கி ஏறியதற்காகவும், சைதாப்பேட்டை ரெயில் நிலையத்தில் 73 பேர்களை நேற்று போலீசார் கைது செய்தனர்.

எழும்பூர் ரெயில்வே பாதுகாப்பு படை சப் இன்ஸ்பெக்டர் திருப்பதிராவ் உத்தரவின் பேரில், துணை சப்இன்ஸ்பெக்டர் சி. ராமசந்திர ராவ் இவர்களை கைது செய்தார். கைது செய்யப்பட்டவர்கள் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டனர்.

நாகாலாந்து கவர்னர்

ஷில்லாங், செப். 22—நாகாலாந்து மாநில கவர்னராக எல். பி. சிங், [illegible] ஹிமா நகரில் பதவி ஏற்றார். [illegible] ஏற்கனவே அஸ்ஸாம் மாநில கவர்னராக இருந்து வருகிறார்.

நவமணி

(22—9—73) ஞாயிற்றுக்கிழமை (23—9—73)

விபத்துகள்

நாள்தோறும் விபத்துகள் நடைபெறுவதையும் பல உயிர்ப்பலிகள் ஏற்படுவதும் அறிந்தும் மக்கள் சாலை விதிகளைக் கடைப்பிடிப்பதில்லை என்பதை அறிய வருந்தாமலிருக்க முடியாது.

இரயில்வே தண்டவாளங்களைக் கடக்கும் பொழுதும் சாலையைக் கடக்கும் பொழுதும் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிகளை அவசியம் கடைப்பிடிக்க வேண்டியதும் வற்புறுத்தல் வேண்டும். நகர போலீஸ்காரர்கள் இதற்காக தீவிர நடவடிக்கை எடுப்பதும் அவசியம்.

படித்தவர்கள்கூட தவறு செய்து உயிர் இழப்பதைக் காண பரிதாபப்படாமலிருக்க இயலாது.

நேற்றுமுன்தினம் பெரிய மருத்துவமனைக்கு எதிரிலும், நேற்று சைதாப்பேட்டையிலும் சாலையை கடக்கும்பொழுது பேருந்தினால் மோதப்பட்டு அந்த இடத்தில் உயிர் துறந்துள்ளனர்; அவ்வாறே ஒருசில தினங்களில் கல்லூரி மாணவிகள் என்று கருதப்பட்டவர்கள் இருவரும் இரயில்வே தண்டவாளத்தைக் கடக்கும்பொழுதும் நேற்று மாமனும் மருமகனும் கோடம்பாக்கம் இரயில்வே பாதையைக் கடக்கும்பொழுது உயிர் இழந்துள்ளனர்.

இவ்வாறு அடிக்கடி விபத்துகள் சென்னையிலும் அருகிலும் நடைபெற்று வருவதைக் கண்டு கவலைப்படாமல் என்ன செய்ய?

போலீஸ்காரர்கள் எவ்வளவு கடுமையாக இருப்பினும் சாலை விதிகளைக் கட்டுப்பாடாக மக்களும் வண்டி ஓட்டுநர்களும் கடைப்பிடிக்காமல் இருப்பின் என்ன செய்வது? ஆதலின் அரசியல் கட்சிகளும் சமூக சேவை அமைப்புகளும் மக்களிடம் தீவிரபிரசாரம் செய்து சாலை விதிகளைக் கட்டுப்பாடாக கடைப்பிடிக்க மக்களை வற்புறுத்தல் வேண்டும்: அதே சமயம் போலீஸ்காரர்களும் சாலைவிதிகளை மீறுகிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

இந்திரா காந்திக்கு கேள்வி

எந்தசோஷலிசதிட்டத்திற்கு தி.மு.க. ஆதரவு தரவில்லை? மந்திரி மாதவன் பேச்சு

காஞ்சீபுரம், செப். 22—மத்திய அரசு கொண்டுவந்த சோஷலிச திட்டங்களில் எந்த திட்டத்திற்கு தி. மு. கழகம் ஆதரவு அளிக்கவில்லை என்று பிரதமர் இந்திராவுக்கு மந்திரி மாதவன் கேள்வி விடுத்தார்.

பிரிந்து போகும் உணர்ச்சி ஏற்படக்கூடிய அளவுக்கு பிரதமர் இந்திரா பேசியுள்ளதாக மாதவன் குற்றஞ்சாட்டினர்.

காஞ்சிபுரத்தில்

சரிகை ஆலை: மாதவன் திறந்தார்

சென்னை, செப். 22—காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு சரிகை உற்பத்தி ஆலையை தொழில் அமைச்சர் மாதவன் திறந்து வைத்தார்.

விழாவுக்கு காஞ்சீபுரம் நகராட்சித் தலைவர் கே. டி. எஸ் மணி தலைமை தாங்கினர்.

அமைச்சர் மாதவன் கூறியதாவது:—

அண்ணாவின் நீண்ட நாள் விருப்பம் ஒன்று அவரது 65-ஆவது பிறந்த நாளை நாமெல்லாம் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த வேளையில் நிறைவேறுகிறது. இதுபற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த ஆலை மிகப் பெரிய ஒன்றாக அமைந்து நல்ல பலனை அளிக்குமென்று நம்புகிறேன்.

கைத்தறி நெசவில் ஈடுபட்டிருப்போரை வேறு தொழிலில் ஈடுபடுத்த வேண்டுமென்று ஒரு கோரிக்கை அடிக்கடிக் கூறப்பட்டு வருகிறது. இதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

நம் நாட்டு மக்களும், பிற நாட்டாரும் விரும்பி ஏற்றுக் கொள்ளும் வகையில் வகை வகையான ஆடைகளை கைத்தறிகளின் மூலம் உற்பத்திச் செய்திட வேண்டும். வித விதமான ஏற்றுமதி ரகங்களை உருவாக்கிட வேண்டும். இதை மனதிற் கொண்டு தான் மாவட்டத்திற்கு ஒரு பயிற்சி நிலையம் என்று அரசு பல லட்சம் ரூபாய் செலவிட்டு தற்போது 12 பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

இந்தத் தொழிலை எந்த வகையில் விரிவுபடுத்தினப்படி இதை லாபகரமானதாக ஆக்கலாம் என்பதைப் பார்க்கவேண்டும்.

இங்கே தொடங்கப்பட்டுள்ள இந்த சரிகை உற்பத்தி ஆலை அண்ணா இருக்கும் போதே ரூபாய் 25 லட்சம் செலவில் தொடங்குவது என்று திட்டமிடப்பட்டது. தற்கட்டமாக 7 லட்சம் ரூபாய் செலவில் இப்போது அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சரிகையை வாங்கிப் பயன்படுத்தும் பட்டு நெசவாளிகளும் இந்த ஆலையில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். நம்மாலும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் பட்டுக்குப் பஞ்சம் உள்ளது இதைப் போக்கும் வகையில் பட்டு வளர்ச்சிக்கென தமிழ்நாட்டில் 3 கோடி ரூபாய்த் திட்டமொன்று வகுத்திருக்கிறோம்.

இங்கேயே சில விவசாய நண்பர்கள் முசுக்கொட்டை பயிரிட முடியும் என்று செய்து காட்டியிருக்கிறார்கள். அரசு இந்த முயற்சிக்கு

காஞ்சி புரத்தில் அண்ணா பிறந்த நாள் விழா நடந்தது: அமைச்சர் செ. மாதவன் விழாவில் பங்கேற்றுப் பேசுகையில், தி. மு. கழகத்தைப் பற்றிப் பிரதமர் இந்திராவின் குற்றச்சாட்டை மறுத்தார். "மத்திய அரசிடம் நாம் கேட்பது சலுகை அல்ல. உரிமையைக் கேட்கிறோம். தமிழ் நாட்டுக் குடிமக்கள் செல்வம் கொடுத்த வரிப் பணத்தில் நமக்குள்ள நியாயமான பங்கினைத்தான் கேட்கிறோம்.

பிரதமர் பிரிந்துபோகும் உணர்ச்சி ஏற்படும் அளவுக்குப் பேசியிருக்கிறார்.

தி மு கழகத்தின் மீது, குற்றம் சுமத்த முற்பட்டிருக்கிறார்.

ஜனநாயக சமதர்மக் காவலராகத் திகழ்ந்த ஜவஹர்லால் நேருவின் புதல்வியான இந்திரா காந்திக்கு யார் உண்மையான சமதர்மவாதிகள் என்பது தெரியாமல் போனது ஏனோ தெரியவில்லை. மத்திய அரசு கொண்டு வந்த எந்த சமதர்மத் திட்டத்தை தி.மு. கழகம் எதிர்த்தது? சொல்லுவாரா அம்மையார்?

மன்னர் மானிய ஒழிப்புக்கு ஆதரவு தந்தது யார்? தி மு கழகமா? அல்லது இன்று எப்படியாவது தன் கட்சிக்குள்ளே சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று விரும்புகிறாரே காமராஜரா அந்தக் காமராஜரா ஆதரித்தார்?

மன்னர் மானிய ஒழிப்பை எதிர்த்து "ராஜாவின் கூஜா" என்ற பட்டத்தை சுமந்த அந்த காமராஜா உங்கள் சமதர்மத் திட்டங்களை ஆதரித்தார்?

வங்கிகளை நாட்டுடைமையாக்கியபோதும் அரசியல் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவர விரும்பிய போதும் திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரித்து நின்றதே.

திராவிட முன்னேற்றக் கழகமானது எந்த ஒன்றையும் தன் கொள்கை குறிக்கோள்களை அளவு கோலாகக் கொண்டு கணித்தே தனது ஆதரவினை வழங்கிவருகிறது.

தி. மு. கழகம் உறவுக்குக் கை கொடுக்கும்—உரிமைக்கு குரல் கொடுக்கும். இந்தக் கொள்கையைக் கழகம் கை விடவில்லை.

இதை பிரதமர் இந்திரா உணரவேண்டும் என்றார் மாதவன்.

தன் முழு ஒத்துழைப்பையும் அளிக்கும்.

ஒரு விவசாயி தனது நிலத்தில் முசுக்கொட்டை பயிர் செய்தால் ஏற்கனவே அவருக்கு அந்த நிலத்திலிருந்து கிடைத்து வந்த வருவாயில் நட்டம் மேற்பட்டதாகத் தெரிந்தால் அந்த நட்டத்தை அரசே ஈடுசெய்யும்; இப்படி ஐந்தாண்டுகளுக்கு அரசு நிதி உதவி செய்யலாம்.

சரிகை ஆலையோடு, இங்கே பட்டும் கிடைக்க வகை செய்துவிடுவோமானால் காஞ்சிபுரம் பட்டு தொழிலுக்கு முழுமையான பாதுகாப்புக் கிடைத்துவிடும் என்று மாதவன் கூறினர்.

பிரதமர் வீட்டுக்கு மவுன ஊர்வலம்

புதுடெல்லி, செப். 22—டெல்லியில் டாக்டர்கள், எஞ்சினீயர்கள், விஞ்ஞானிகள், பொதுஜாதா நிறுவனர்கள் கல்வி நிறுவனர்கள் சுமார் 1000 பேர் பிரதமரது இல்லத்தை நோக்கி மௌன ஊர்வலமாகச் சென்றனர். மத்திய அரசாங்கம் கொண்டுவர வேண்டும் என்று பிரதமரிடம் வலியுறுத்துவதற்காக டாக்டர்கள், எஞ்சினீயர்கள் பொதுக் குழுவிலிருந்து ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்தது.

அகில இந்திய மத்திய அரசு அதிகாரிகள் கூட்டு சம்மேளனத்தைச் சேர்ந்த சங்கங்களும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

பிரதமரது இல்லத்துக்கு அருகே ஊர்வலத்தை போலீசார் தடுத்து நிறுத்தினர். 6 பேர் உள்ளிட்ட கோஷ்டியினர் பிரதமரது இல்லத்துக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

எஞ்சினீயர்கள் மூன்று டாக்டர்கள், மத்திய அரசு அதிகாரிகள் கூட்டு சம்மேளன காரியதரிசி கே. ஜி ராமகிருஷ்ணன் ஆகியோர் பிரதமரை சந்தித்து தங்கள் கோரிக்கையை விளக்கினர்.

இணைப்புப் பேச்சு பற்றி

அசோக் மேத்தா புகார்

"பழைய காங்கிரசின் மதிப்பைக் குறைக்க இந்திரா சதி"

புதுடெல்லி, செப். 22—காங்கிரஸ் இணைப்பு பற்றி கூறப்படும் வதந்திகள், எதிர்க் கட்சிகள் ஒன்று சேருவதைக் குலைக்க பிரதமர் இந்திரா செய்யும் தந்திரமாகும் என்று பழைய காங்கிரஸ் தலைவர் அசோக மேத்தா கூறினர்.

பழைய காங்கிரஸ் கட்சிக் காரியக் கமிட்டி உறுப்பினர்களுக்கும், பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர்களுக்கும் அசோக்மேத்தா சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

அதில், இணைப்பு குறித்து வதந்திகள் எப்படி கிளம்பின என்பதை ஆராய வேண்டும் என்றும், அரசியல் பிரதமர் எப்படி பயன்படுத்திக் கொள்கிறார் என்பதை, இதுவிளக்கியது என்றும் கூறப்பட்டு இருக்கிறது.

தம்மை சந்திக்கும்படி பிரதமர், காமராஜரை பல முறை அழைத்தார் அதை வருகிறது என்று தெரிந்ததாகும். அதை ஒட்டி காமராஜரும் கடந்த ஆகஸ்டு 11ம் தேதி பிரதமரை சந்தித்தார்.

மதிப்புக்குரிய காமராஜர் இந்தச் சந்திப்பை ஒரு தனிப்பட்ட சந்திப்பாகக் கருதி அதை விளம்பரப்படுத்த விரும்பவில்லை; ஆனால் அவரது மௌனமும் பண்பும், அசிங்கமான வகையில் தவறாகப் பயன்படுத்தப்பட்டு ருகிறது என்று அதில் அசோக் மேத்தா கூறியிருக்கிறார்.

குறும்புத்தனம்

ஆகஸ்டு 11ம் தேதியே பத்திரிகைகளில் குறும்புத்தனமான செய்திகள் வரத் துவங்கின.

பழைய காங்கிரஸ் ஆளும் கட்சியுடன் இணைப்போகிறது என்று அடிப்படையற்ற செய்திகள் வெளியாயின.

இந்திரா காந்தியுடன் சேரப்போவதாக, சில பொறுப்பானவர்களின் பெயர்கள் பயன்படுத்தப்பட்டன. இவைகள் எல்லாம் மறுக்கப்பட்டும் பிரதமரை இந்திரா வதந்திகளை பரப்பிக்கொண்டே வந்தது. இல பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகள் கூட, பிரச்சாரத்தில் ஈடுபட்டன.

கடந்த சில காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், இந்த இணைப்பு பேச்சு பற்றிய யோசனை வந்ததாகவும், முக்கியமில்லாத பேர் செப் முன்வந்து இருப்பதாகவும், பிரதமர் அறிவித்தார். சென்னையில் செப்டம்பர் 30ந் தேதி காமராஜரை இந்திரா சந்திப்பது பற்றி யோசனை தெரிவிக்கப்பட்டது. காமராஜரும் அவரது ஆதரவாளர்களும் 30ம் தேதி புதுகாங்கரசில் சேருவதாக தேதி கூட குறிப்பிடப்பட்டது.

ஆனால், இந்திராவின் சென்னை விஜயம் நெருங்க நெருங்க, அவர்களின் குரல் மாறத் துவங்கியது. ஏனெனில் இந்திராவை சந்திப்பதில் காமராஜ் ஆர்வம் காட்டவில்லை; ஆயினும் காமராஜரை சந்திப்பதற்கு, பிரதமர் திட்டமிடவில்லை என்று, பிரதமர் தரப்பில் கூறப்பட்டது.

அதன் பிறகு சென்னையில் பேசிய இந்திரா, காமராஜுடன்தான் இணைப்பு குறித்துப் பேசவில்லை என்று தெரிவித்தார். காங்கிரஸ் கமிட்டியில் தாம் கூறியது, உத்தரப்பிரதேசத்திலும், மத்திய பிரதேசத்திலும் காங்கிரசில்சேரமுன்வந்துள்ள சில சோஷலிஸ்டுகளை பற்றியதாகும் என்றும் இந்திரா தெரிவித்தார் என்று அசோக் மேத்தா குறிப்பிட்டிருக்கிறார்.

மூன்று காரணங்களுக்காக, இப்படிப்பட்ட கீழ்த்தரமான முயற்சியில் இந்திரா ஈடுபட்டார் என்று அசோக்மேத்தா கூறினர்.

ஒன்று, எதிர்க் கட்சிகள் ஒன்றுபட்டு வருவதை அவர் விரும்பவில்லை.

இரண்டாவது பழைய காங்கிரஸ் மீது எதிர்க் கட்சிகளுக்கும் மக்களுக்கும் ஒரு அவநம்பிக்கையை உண்டாக்கவேண்

(2-ம் பத்தி பார்க்க)

ஊழலை ஒழிக்க சாந்திசேனை: வினோபா தலைமையில் முடிவு

சேவாகிராமம், (வார்தா); செப். 22—ஊழல்—வன்முறைகளை எதிர்த்து கிளர்ச்சி நடத்த, சாந்தி சேனை அமைக்க, வினோபாவின் தலைமையிலான அ. இ. சர்வ சேவா சங்கம் தீர்மானித்திருக்கிறது;

செலவு குறைவாகவும், ஊழல் இல்லாததாகவும் தேர்தல் முறையை சீரமைக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது.

இச்சங்கம் ஏற்பாடு செய்த 3 நாள் தேசிய மாநாடு நேற்று முன்தினம் முடிவடைந்தது.

ஆச்சாரியா வினோபாவே, ஆச்சாரிய கிருபளானி, இளந்துருக்கியர் தலைவர் கிருஷ்ணகாந்த், சோஷலிஸ்டு தலைவர் எஸ். எம். ஜோஷி, ஸ்ரீமன் நாராயண், சர்வ சேவா சங்கத் தலைவர் சித்தராஜ் தட்டா உட்பட 200க்கு மேற்பட்ட பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

மத்திய கனரகத் தொழில் உதவி மந்திரி சித்தேஷ்வர் பிரசாத் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார்: ஆனால் உடல்நலம் சரியில்லாததால் அவர் கலந்து கொள்ளவில்லை.

தேர்தல்முறையைசீரமைப்பதுடன், பற்றுக்குறை நிதி நிலைமையைக் கைவிடுமாறும், கல்விமுறையைசீரமைக்குமாறும் மிகவும் தேவைகளாகஇருப்பவர்களுக்கு பலன் கிடைக்குமாறு திட்டம் தீட்டுமாறும் மாநாடு சர்க்காரை கேட்டுக் கொண்டது.

மாநாட்டில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

விலை உயர்வு, வேலையில்லாத்திண்டாட்டம், ஊழல் ஆகியவை பரவுவது குறித்து தீர்மானம் கவலை தெரிவித்தது.

லஞ்ச ஊழல் குற்றவாளி என்று கண்டு பிடிக்கப்பட்ட எம்.பி., எம் எல்.ஏ. அல்லது மந்திரிக்கு தேர்தலில் நிற்க டிக்கெட் மறுக்குமாறும், நிர்வாகத்தில் சிக்கனத்தைக் கையாளுமாறும், அத்யாவசியப் பண்டங்களின் உற்பத்தியை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளுமாறும் சர்க்காரை தீர்மானம் வற்புறுத்தியது.

தீய பழக்கங்களுக்கு எதிராக பொதுஜனக் கருத்தைத் திரட்டவும், காந்திய தத்துவத்துக்கு இசைவாக சமூக—பொருளாதார நிலையை அபிவிருத்தி செய்யவும் செயல் திட்டமொன்றை மகாநாடு நிறைவேற்றியது. வன்முறையையும் எதிர்க்கவும் ஊழலை எதிர்த்துக் கிளர்ச்சி துவக்கவும், மதவிலக்கு அமுலாக்க சக்தியான சாந்தி சேனை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

(7-ம் பத்தி தொடர்ச்சி)

டும், ஏனெனில், காங்கிரஸ் உருப்படியான நடவடிக்கைகளை எடுக்கும் என்று இந்திராவுக்கு தெரியும்.

எல்லாவற்றுக்கும் மேலாக தனது மோசமான நிர்வாகம் காரணமாக, நாட்டில் ஏற்பட்டுள்ள அதிருப்தியைக் குறித்து. அ. இ. காங்கிரஸ் கமிட்டியில் எழவிருக்கும் கண்டனத்தை திசை திருப்பும் தந்திரமாகும்.

இதன் தொடர்பாக, தினேஷ் சிங் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், பிரபல பழைய காங்கிரஸ் தலைவர்கள் தம்முடன் வந்து சேரப்போவதாகவும்; நாட்டுக்கு பணிபுரியும் சக்திமிக்க கட்சி தனது கட்சியே ஆகும் என்றும் நம்பச் செய்ய முயன்றிருக்கிறார்— என்று அசோக்மேத்தா கூறியிருக்கிறார்.

எதற்கும் துணிந்தவர்

தனது காரியத்தை சாதிப்பதற்காக தமையும், தமது கொள்கைகளை எதிர்ப்பவர்களை குழப்புவதற்காக எதைச் செய்யவும் தயங்காதவரா வார் பிரதம மந்திரி என்றார், அசோக்மேத்தா.

"முக்கிய பிரச்சினையை விளக்குவதிலும், அதற்கு தகுந்த பரிகாரம் காணுவதிலும் பழைய காங்கிரஸ் தொடர்ந்து பாடுபட வேண்டும். இந்திராவுக்கு எதிராக உள்ள சக்திகளை எதிர்க் கட்சிகளை ஒன்றுபடச் செய்வதில், பழைய காங்கிரஸ் திறந்த மனத்துடன் இருக்கும். பிரதமரின் முயற்சிகள் வெறும் நீர்க்குமிழ்களாகத்தான் இருந்து வரும்" என்று அந்த அறிக்கையில் அசோக்மேத்தா கூறியுள்ளார்.

நீர் மட்டம்

சென்னை, செப். 21—

மேட்டூர்	34.12	மீட்டர்
பெரியாறு	6.29	"
வைகை	14.48	"
பாபநாசம்	6.68	"
கிருஷ்ணகிரி	15.24	"
சாத்தனூர்	28.13	"
மணிமுத்தாறு	3.26	"

சோஷலிஸ்டு = மார்க்சிஸ்ட்

கூட்டணியின் முடிவு

பார்வர்டு பிளாக்குடன் பேச்சுவார்த்தை: பி. ராமமூர்த்தி பேட்டி

புதுடெல்லி, செப். 22—புதிதாக அமைக்கப்பட்டுள்ள சோஷலிஸ்டு—மார்க்சிஸ்ட் கூட்டணியில் பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்த்துக்கொள்வது பற்றி பேச்சுவார்த்தை நடத்தப்படும்.

மார்க்சிஸ்டு தலைவர் பி. ராமமூர்த்தியும் சோஷலிஸ்டு தலைவர் பெர்ணாண்டசும் இந்த தகவலை டெல்லியில் நேற்று நிருபர்களிடம் வெளியிட்டனர்.

இந்த பேரவை புரட்சிகர சோஷலிஸ்டு கட்சியுடனும் இந்த புதிய கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தும்.

முதலில் மேற்கண்ட 2 அகில இந்திய கட்சிகளை சேர்க்க முயற்சி நடைபெறும் கேரள தொழிலாளி கட்சி, குடியரசு கட்சி ஆகிய கட்சிகளுடனும் இது சம்பந்தமாக பேச்சு வார்த்தை நடைபெறும்.

கம்யூனிஸ்டு கட்சியின் நிலை

சோஷலிஸ்டு மார்க்சிஸ்டு புரட்சிகர முன்னணியில் கம்யூனிஸ்டு கட்சி சேரும் வாய்ப்பு இல்லை என்று ராமமூர்த்தி, பெர்ணாண்டஸ் ஆகியோர் தெரிவித்தனர்.

புது காங்கிரசுடன் கம்யூனிஸ்ட்டு கட்சி உறவு கொண்டுள்ளதால், புரட்சிகர முன்னணியுடன் சேர கம்யூனிஸ்ட்டு கட்சியினால் இயலாது என்று ராமமூர்த்தி தெரிவித்தார்.

இந்த முன்னணியில் கம்யூனிஸ்ட் கட்சி சேரவிரும்பினால் புது காங்கிரசுடன் உறவை முறித்துக் கொள்ள கம்யூனிஸ்டுகள் முன் வரவேண்டும் என்றார் பெர்ணாண்டஸ். மேலும் கேரள கூட்டு மந்திரி சபை மேற்கு வங்காள முற்போக்கு ஜனநாயக முன்னணி ஆகியவையிலிருந்தும் கம்யூனிஸ்டுகட்சி விலகவேண்டும் என்று அவர் கூறினர்.

முஸ்லிம் லீக் கட்சியுடன் முன்னணி உறவுகொள்ள இயலாது என்று அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலளித்தனர்.

விலை உயர்வு பிரச்னையில் கூட்டாக போராட்டம் நடத்துவதற்காக செயல் கமிட்டி ஒன்றை அமைக்க மார்க்சிஸ்டு, சோஷலிஸ்டு கட்சியில் தீர்மானித்துள்ளனர்.

ஓட்டுரிமை

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் அனைவருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட வேண்டும் என்று இந்த "புரட்சிகர கூட்டணி" கோரியுள்ளது.

இந்தியா, சீனா ஆகிய நாடுகளுக்கிடையே சகஜ உறவு ஏற்படவேண்டியதன் அவசியத்தை இந்தக் கட்சிகள் வற்புறுத்தியுள்ளன.

மந்திரியை கேரோ செய்த பெண்கள்

பம்பாய், செப். 22—மாராட்டிய உணவு அமைச்சர் வர்த்திக்கை 30 பெண்கள் நேற்று சுமார் 3 மணி நேரம் கேரோ செய்தனர்.

குடும்பப் பெண்கள் விலைவாசி உயர்வு எதிர்ப்புசெயல் கமிட்டியைச்சேர்ந்தவர்களாவர், இந்தப் பெண்கள்.

அரசு தலைமைச் செயலகத்துக்கு எதிரில் உள்ள அமைச்சரின் வீட்டில் இந்த கேரோ நடைபெற்றது.

தங்களது முக்கிய கோரிக்கையான, உணவு ரேஷனை மாதத்துக்கு 7 கிலோவாக உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை அமைச்சர் ஏற்றுக்கொண்டார் என்றும் அதன் பிறகே கேரோ வாபஸ் பெறப்பட்டதாகவும் இக்குழுவின் தலைவியான திருமதி ரிஜுல்கோர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

சமீபத்தில் மாதாந்திர உணவு ரேஷன் 6 கிலோவாகக் குறைக்கப்பட்டிருந்ததாக அவர் தெரிவித்தார்.

இந்த 30 பெண்களும் அமைச்சரை கேரோ செய்த போது, வெளியில் காவலுக்கு நின்ற போலீசாருக்குக் கூட தெரியவில்லையாம்.

வானொலி

(23—9—73)

ஞாயிறு

சென்னை—1

(416.7 மீட்டர்)

காலை
5-55 மங்கள இசை
6-[illegible] குறளமுதம்
6-10 திருப்பாடல்கள்
6-35 இசையமுதம்
—எம். எஸ். சுப்பு[illegible]லட்சுமி
7-25 என். ரமணி
—புல்லாங்குழல்
7-45 எஸ். பாலசுப்ரமணியம்
—பாட்டு
9-05 மழலையமுதம்
9-30 வசந்தா
கோபாலகிருஷ்ணன்
—பாட்டு

பகல்
12-04 சூரியகாந்தி
12-50 மெல்லிசை
1-04 இளைஞர் அமுதம்
1-30 அரிமா [illegible] அரங்கம்
2-10 சிறுவர் சோலை
2-30 நிஜமும் நிழலும்
—நாடகம்

மாலை
—இசைச் சித்திரம்
4-04 விரும்பிக் கேட்டவை
5-04 ஜானகி ராமநாதன்
—வீணை
6-05 திரைகானம்
6-15 செய்தி அரங்கம்
7-30 விவசாயிகளுக்கு
8-04 இன்னிசை
8-15 ஜானகிராமநாதன்
—வீணை
9-15 சீர்காழி எஸ்.
கோவிந்தராசன்
பாட்டு
10-30 இ[illegible]சை
11-04 [illegible]ப்பு முடிவு

சென்னை - 2

(211.8 மீட்டர்)

காலை
6-55 மங்கள இசை
7-15 மேற்கத்திய இசை
7-45 இசைமலர்
—ஷேக் சின்ன
மவுலானா—நாதஸ்வரம்
8-20 ஆட்டவிடுபு
(தெலுங்கு)
8-30 உருது முஷைன்
பகுதிகள்

பகல்
11-04 கலாரங்கம்
(மலையாளம்)
11-30 ஹம்மெ (கன்னடம்)
12-00 மேற்கத்திய இசை
1-30 இரு தெலுங்கு
நாடகம்

மாலை
6-15 விளையாட்டு
வர்ணனை — ஆங்கிலம்
6-30 வசந்தா கோபால
கிருஷ்ணன்—பாட்டு
7-15 இளைஞர்களுக்கு
(ஆங்கிலம்)
9-30 நடப்பு நிகழ்ச்சிகள்
(ஆங்கிலம்)
10-00 மேற்கத்திய இசை
11-00 ஒலிபரப்பு முடிவு

திருச்சி

(619.1 மீட்டர்)

காலை
6-00 மங்கள இசை
6-10 அறவுரை
6-15 வாமாலை
6-30 விவசாயிகளுக்கு
6-40 துதிப்பாடல்கள்
7-04 பக்திமாலா மெட்டகம்
7-25 நெட்டகம்
7-30 மீண்டும்கேட்போம்
—பாட்டு
8-30 தேசபக்திப் பாடல்கள்
8-[illegible] எஸ். நாகம்மா—பாட்டு
9-45 மணிமலர்

பகல்
12-04 சூரியகாந்தி
12-50 திரைப்பட இசை
1-04 வெண்ணுலகம்
1-30 நீங்கள் கேட்டவை
3-04 சென்னை 1—அஞ்சல்

மாலை
4-30 என். ஜி. ராஜமாணிக்
கம் என். ஜி. கண்ணசா
நாதஸ்வரம்
5-30 தொழிலாளர்களுக்கு
6-10 வாத்திய இசை
6-45 கிராம சமுதாயம்
7-30 விவசாயிகளுக்கு
8-00 இளைஞர் உலகம்
9-15 தூயக ஒலியம்
—மலையாளநாட்டுப்
பாடல்கள்
9-30 இசை வடிவங்கள் தந்த
இன்பக் கவிதை—
மு. அருணாசலம் உரை
10-30 ஒலிபரப்பு முடிவு

ஆங்கிலத்தில் செய்தி: காலை 6-02, 7-02, 8-10, 9-02 பகல் 12-02, 1-02, 2-00 3-02; மாலை 5-02, 6-02, இரவு 7-02, 8-02, 9-00, 11-02

தமிழில் செய்தி காலை 7-15, பிற்பகல் 12-40; இரவு 7-15; மாநிலச் செய்திகள் பிற்பகல் 12-30, மாலை 6-30.

வர்த்தக ஒலிபரப்பு

விவித்பாரதி

சென்னை (193.5 மீட்டர்)
திருச்சி (202.7 மீட்டர்)

காலை 9-30—10-00
உங்கள் விருப்பம்

பகல் 2-00—2-30
திரை அமுதம்

மாலை 5-30—6-30
மாலை இசை

இரவு 7-45—9-00
தேன் கிண்ணம்

இரவு 9-15— 9-30
வண்ணச் சுடர்

"வாழ நினைத்தால் வாழலாம்"
—சித்திரம்

ஆந்திர பிரச்னைக்கு தீர்வு காண 6 அம்ச திட்டம்: டெல்லிபேச்சில் உடன்பாடு

புதுடெல்லி, செப். 22—ஆந்திரப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் வரையில் 6 அம்சத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்த திட்டங்கள் குறித்த அறிக்கையில் ஆந்திரப் பிரிவினையை ஆதரிப்பவர்களும்; ஒற்றுமையை வற்புறுத்துபவர்களும் கையெழுத்திட்டிருக்கின்றனர்.

பின்னடைந்த பகுதி மக்களுக்கான பாதுகாப்பு ஷரத்துக்களுடன் கூடியதும், அரசாங்க உத்தியோகங்களில் ஆந்திர மக்களுக்கும், தெலுங்கானா மக்களுக்கும், சமவாய்ப்புகளை உறுதி செய்வதுமாக அறிக்கை தயாரிக்[illegible]ட்டிருக்கிறது.

ஆந்திரா காங்கிரஸ் [illegible]ாராட்டக் குழுவின் பேரவையின் அங்கீகாரம் இந்த உடன்பாட்டுக்குக் கிடைப்பதை எதிர் பார்த்து இதில் கையெழுத்திடுவதாக பிரிவினையாளர்கள் ஒரு நிபந்தனையை சேர்த்தனர்.

விவாதம்

ஆந்திராவைச் சேர்ந்த காங்கிரஸ் எம்.பிக்களும் மற்ற கட்சித் தலைவர்களும் புது திட்டம் பற்றி துணை உள்துறை மந்திரி கே. சி. பந்த் [illegible]ழைத்த கூட்டத்தில் இரண்டு [illegible]ம் விவாதித்தனர். கடைசியில் உடன்பாடு தெரிவித்தனர்.

தெலுங்கானா பிரிவினைத் தலைவர் டாக்டர் சென்னா ரெட்டி ஆதரவாளர்களான மல்லிகார்ஜுனன் எம். பி., எம். எம். ஹஷீம் எம். பி. இருவரும் தங்கள் தலைவருடன் பேசுவதற்காக கூட்டத்தின் நடுவில் சென்றுவிட்டனர்.

வேண்டுகோளில் கையொப்பமிட்ட பின் ஆந்திரா, தெலுங்கானா காங்கிரஸ் எம்.பிக்கள், எம். எல். ஏக்கள் எம். எல். சிக்கள் உள்துறை மந்திரி உமா சங்கர்தீட்சித், துணை மந்திரி கே. சி. பந்த் ஆகியோர் பிரதம மந்திரி இந்திரா காந்தியின் இல்லத்துக்குச் சென்று உடன்பாடு பற்றி தெரிவித்தனர்.

பிரதமர் மகிழ்ச்சி

பிரதமர் அவர்களை பாராட்டிவிட்டு உடன்பாடு குறித்து மகிழ்ச்சி தெரிவித்தார்.

ஆந்திர பிரிவினை கோரும் ஆந்திர ராஷ்டிரிய காரிய சரண சமிதி தலைவர் பி. வி. சுப்பாரெட்டியும், அவரது 11 சகாக்களும் வெளியிட்ட அறிக்கையில் புது திட்டம் ஆலோசனைக்கு மிகவும் உகந்தது என்று தெரிவித்தனர். இவை சமிதியின் ஆலோசனைக்கு வைக்கப்படும் என்று உறுதி கூறினர்.

புது திட்டத்தை [illegible]செயல்படுத்த அரசியல் சட்டத் திருத்தம் அவசியமாகும்.

ஆந்திரா எம். பி.க்களும் சுப்பாரெட்டியும் நேற்றிரவு பிரதம மந்திரியை சந்தித்து புது திட்டம் பற்றிய தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இவர்கள் தனித் தனியாக இந்திரா காந்தியைச் சந்தித்தனர்.

பிரதமரைச் சந்தித்த [illegible] ரெட்டி, ஆந்திர பிராந்தியத்திலுள்ள பின்னடைந்த பகுதிகளை முன்னேற்றத்தைக் குறித்து திட்டவட்டமான உறுதிமொழிகள் கோரினார். போச்சம்பாடு, நாகார்ஜுனசாகர் திட்டங்களைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்றார். இக் கோரிக்கைகளை கவனிப்பதாக இந்திரா காந்தி வாக்களித்தார்.

மறுப்பு

[illegible] அம்ச தி[illegible] [illegible]பாருந்து நோக்கவந்ததல்லவா தலாவ, அது "உத்தியோக பூர்வமானதல்ல" என்று கூறி அதைப் பற்றி கருத்து தெரிவிக்க விரும்பவில்லை என்று

சென்னா ரெட்டி கூறினார்.

தெலுங்கானா பிராந்திய கமிட்டி தலைவர் கே. ராஜமல்லு, வி. பி. ராஜு, ஜே. வெங்கடேஸ்வரராவ், பி. பார்த்தசாரதி, மந்திரி ரகுராமய்யா, துணைமந்திரி ஜி. வெங்கடசாமி, முன்னாள் முதல்வர் பி. வி. நரசிம்மராவ் கையெழுத்திட்டவர்களில் முக்கியமானவர்கள்.

அறிக்கையின் விவரமாவது:—

"ஆந்திரப் பிரதேச மக்கள் முன்னுள்ள பிரச்னைகள் பற்றி மத்திய தலைவர்களுடனும் எங்களு[illegible]ள்ளும் நாங்கள் விவாதித்தோம். கீழ்க்கண்ட கொள்கைகளை அனுசரித்து நடவடிக்கை எடுப்பதானால் ஆந்[illegible]ன் எதிர்காலம் பற்றி மக்[illegible]ளுக்குத் தற்[illegible]போதுள்ள [illegible]தகங்கள் பூரணமாக நீங்கி விடும் என்று நாங்கள் திருப்திப் படுகிறோம்.

(1) ஆந்திராவில் உள்ள பின்னடைந்த பகுதிகளின் வேகமான வளர்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மாநிலத்தின் தலைநகரையும் திட்டமிட்டு அபிவிருத்தி செய்ய வேண்டும். இவைகளுக்காக நிதி ஒதுக்கப்பட வேண்டும். இந்தப் பகுதியின் அபிவிருத்திக்கான திட்டங்களை அமல்படுத்துவதிலும் செயல்படுத்துவதிலும் மேற்கண்ட [illegible] பகுதிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் நிபுணர்களையும் சேர்த்து கொள்ள வேண்டும். மாநில அபிவிருத்திக் கொள்கையில் இது ஒரு முக்கிய அங்கமாக இருக்கவேண்டும். மாநில மட்டத்தில் திட்ட போர்டு ஒன்று அமைக்கப்பட வேண்டும். பலவேறு பிற்பட்ட பகுதிகளுக்கும் உப கமிட்டிகள் அமைக்க வேண்டும். மேற்கண்ட குறிக்கோளை அடைய இவை தகுந்த சாதனங்களாக இருக்கும்.

(2) கல்வி நிலையங்களில் சேர்ப்பதில் அந்தந்தப் பகுதி மாணவர்களுக்குப் பொதுமான முதல் சலுகைஅளிக்கப்பட வேண்டும். இவ்விஷயத்தில், மாநிலம் முழுவதும் ஒரே மாதிரியான ஏற்பாடுகள் இருக்கவேண்டும். தற்போதுள்ள கல்வி வசதிகளைப் பெருக்ககூடிய முறையில் ஹைதராபாத்தில் ஒரு மத்திய பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும். மாநில கல்விக் கொள்கையின் அடிப்படையாக இவை இருக்க வேண்டும்.

(3) குறிப்பிட்ட தலைமைக் காரியங்களில் தவிர, மற்ற அரசு காரியாலயங்களில் [illegible] பதவில்லாத பதவிகளு[illegible]க்கும் ஸ்தல ஸ்தாபனங்களில் உள்ள இதே போன்ற பதவிகளுக்கும் தாசில்தார் ஜூனியர் என்ஜினியர், சிவில் அஸிஸ்டென்ட் சர்ஜன் ஆகிய பதவிகளுக்கும் ஸ்தல அம்பட்சகர்களுக்கு ஒரு குறிப்பிட்ட வரம்பு வரை முதல் சலுகை அளிக்க வேண்டும். மாநிலத்தின் மொத்த தேவையை அனுசரித்து இது நடைபெற வேண்டும். கூடிய வரை பகுதி வாரி அடிப்படையில் உத்தியோக உயர்வு வாய்ப்புகளும் இருக்க வேண்டும்.

(4) உயர் அதிகாரம் படைத்த நிருவாகடிரிப்யூனல் ஒன்று அமைக்கப்பட வேண்டும். நியமனம், சீனியாரிட்டி, உத்தியோக உயர்வு முதலிய விஷயங்களில் வரக்கூடிய புகார்களை அது விசாரித்து முடிவு கூற வேண்டும். அதன் முடிவுகள் சாதாரணமாக அரசாங்கத்தைக் கட்டுப் படுத்துபவையாக இருக்க வேண்டும்.

(5) இது சம்பந்தமாக [illegible] தேவை[illegible]டும் அளவுக்கு அர

சியல் சாஸனம் திருத்தப்பட வேண்டும் இது சம்பந்தமான விசேஷ அதிகாரங்கள் ராஷ்டிரபதிக்கு அளிக்கப்பட வேண்டும்.

(6) இந்தக்கொள்கைகளைக் கடைப்[illegible]டித்தால் முல்க்கி விதிகளையோ பிராந்தியக் கமிட்டியையோ நீக்கவேண்டிய அவசியம் இருக்காது.

மேற்கண்டவாறு அறிக்கை கூறுகிறது.

ஆந்திரப் பிரதேச பிரச்னை பற்றி மத்திய மந்திரி சபையின் அரசியல் விவகாரக் கமிட்டி நேற்று விவாதித்தது.

சென்னை மார்க்கெட்

சென்னை, செப். 22—

தங்கம்

(24 காரட்) சுத்த தங்கம் 10 கிராம் ரூ. 366 00
(22 காரட்) சில்லரை கிராம் ரூ. 35 00
(14 காரட்) சில்லரை கிராம் ரூ. 22 25

வெள்ளி

பார் வெள்ளி (1 கி. கி.) ரூ. 703 00
உள்ளூர் வெள்ளி ரூ. 692 00
வெள்ளி 10 கிராம்) ரூ. 7 15

மணிலாப்பயறு

மாரிகால் பக்டாணி 80 கி. கி. ரூ. 295 00

மணிலா எண்ணெய்

மொத்த விலை ரூ. 740 00
சில்லரை விலை ரூ. 7 65

விளக்கெண்ணெய்

(100 கி. கி.) சென்னை கிடங்கு டெலிவரி திருப்பத்தூர் மொத்த விலை ரூ. 640 00
சேலம் தாமரை அன்னம் மார்க் (16 05கி.கி.) ரூ. 100 00

தேங்காய் எண்ணெய்

16·06 கி.கி.) டின். எம். எஸ். மார்க் ரூ. 159 00 முதல் ரூ. 160 00

நல்லெண்ணெய்

17 கி. கொண்ட டின் 1-க்கு (அக்மார்க் குருபரன் மார்க்) ரூ. 128 00
[illegible]ற்பனை வரி [illegible] சில்லரை கிலோ 1-க்கு) ரூ. 8 40

கடலைப்பிண்ணாக்கு

கி.கி. கொண்ட மூட்டைக்கு 70 எக்ஸ்பெல்லர் ரூ. 80 00

சர்க்கரை

பகிரங்க மார்க்கெட் விலை 100 கி.கி. ரூ. 340 00 முதல் ரூ. 342 00

பிரதமரிடம் பர்மா தமிழர் மனு

சென்னை, [illegible].22—அனைத்திந்திய பர்மா இந்தியர் சங்கத்தின் சார்பில் பிரதமர் இந்திரா காந்தியிடம் ஒரு மனு தரப்பட்டது.

அந்த மனுவில் பர்மா தமிழர்களுக்கு தரப்படும் முதல் கடனுதவி ரூ. 2 ஆயிரம் மானியமாகத்தரவேண்டுமென்றும், குடிசை மாற்று வாரியம் அமைக்கும் வீடுகளின் செலவுகளுக்கு ஈடாக பர்மா தமிழர்களுக்கு வீட்டு கடனுதவி வழங்கவும், அகதிகள் கூட்டுறவு வங்கியின் சகல திட்டங்கள் தயாரிக்கப்பட்டு சுலப தவணைகளில் கடன் வழங்கச் செய்யவும் மிருக்கிறது.

மறுவாழ்வு சம்பந்தப்பட்ட எல்லா துறைகளிலும் பர்மா தமிழர்களுக்கு பிரதிநிதித்துவம் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

சங்கத் தலைவர் டாக்டர் ஆர். வாசுதேவ், பொதுச் செயலாளர் பி வெங்க[illegible]சன் ஆகியோர் சென்று இந்திராவிடம் மனு கொடுத்தனர்.

3 புது ஸ்டாம்புகள் வெளியீடு

புதுடெல்லி, செப். 22—வரலாற்று நிபுணர் ரமேஷ் சந்தர், கிரிக்கட் ஆட்டக்காரர் ரஞ்ஜித்சிங்ஜி, விடுதலை போராட்ட வீரர் விட்டல் ப[illegible]பட்டேல் ஆகிமூவரை கவுரவிக்கும் வகையில் தபால்—தந்தி இலாகா [illegible]மாதம் 27-ந்தேதியன்று [illegible] சிறப்புத் தபால் தலைகள் வெளியிடுகிறது.

ரமேஷ் சந்தர் நினைவு தபால்தலை, பழுப்பு நிறத்தில் இருக்கும்; இதன் விலை 20 [illegible]சா. ரஞ்சித் சிங்ஜி நினைவு தபால்தலை ஆலிவ் [illegible]ச்சை நிறத்தில் அச்சடிக்கப்[illegible]டிருக்கிறது. இதன் விலை 30 பைசா. விட்டல்பாய் பட்டேல் நினைவு தபால் தலையின் விலை 50 பைசா. இதுவும் பழுப்பு நிறத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

முதல் நாள் தபால் உறைகள், தபால்தலை சேகரிப்பு அலுவலகத்திலும், சில குறிப்பிட்ட தபால் நிலையங்களிலும் விற்கப்படும். தபால் தலை சேகரிப்பு அலுவலகத்தில முதல்நாள் முத்திரை குத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ரூ. 2 லட்சம் வைரம் வழிப்பறி

பம்பாய், செப். 22—நகை வைரக்கடை ஊழியர் ஒருவரை நான்கு பேர் வழி மறுத்து மொத்தம் ரூ. 2 லட்சம் [illegible]றுமானமுள்ள வைரம், ரொக்கம், ஜரிகை ஆகியவை கொண்ட பெட்டியைக் கொள்ளையடித்துச் சென்றுவிட்டனர். அவர்கள் ஒரு துப்பாக்கி, ஒரு கத்தி ஆகியவற்றை வைத்திருந்தனர்.

மங்களபாய் அம்பாராம் பட்டேல் என்ற அந்த வைரக்கடை ஊழியர் நேற்று அதிகாலையில் ரயிலில் பம்பாய் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தார். அங்கிருந்து போவாதாவிலுள்ள தனது அலுவலகத்துக்கு ஒரு வாடகை வண்டியில் சென்றார். அப்போது சிலர் ஒரு டாக்சியில் வந்து அந்த வண்டியை வழிமறித்து நிறுத்தினர்.

ரொக்கம் வைரம் முதலியவை வைத்திருந்த பெட்டியை வண்டியிலிருந்து டாக்சி டிரைவர் பறித்துச் சென்றார். மற்றவர்கள் அந்த டாக்சியில் ஏறிக்கொண்டு தப்பி ஓடிவிட்டனர்.

மத்திய அரசாங்க ஊழியர் பஞ்சப்படி ரூ. 10 வரை உயருகிறது

புதுடெல்லி, செப். 22—மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு பஞ்சப்படி உயர்வு அளிக்கப்படுகிறது.

ரூ. 575 வரை சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு ரூ. 7 லிருந்து ரூ. 10 வரையில் இந்த உயர்வு இருக்கும்.

மத்திய அரசு வெளியிட்ட அதிகாரபூர்வமான அறிவிப்பில், ஆகஸ்டு முதல் தேதி முதல் தற்காலிகமாக இது அளிக்கப்படுவதாகக் கூறப்பட்டிருந்தது.

3-வது சம்பளக்கமிஷன் சிபாரிசுகள் மீது இன்னமும் முடிவு எடுக்கப் படவில்லை, ஆகையால் தற்காலிகமாக இந்த உயர்வு அளிக்கப்படுகிறது.

சம்பளக்கமிஷன் சிபாரிசு மீது இறுதி முடிவு எடுக்கப் படும்போது இந்த தற்போதைய உயர்வு அதில்சரிக்கட்டப்படும்.

கூடுதல் பஞ்சப்படி விகிதமாவது:— ரூபாய் 85-க்குக் குறைந்த சம்பளத்துக்கு ரூ. 7 ரூ. 85-லிருந்து ரூ. 209 வரை ரூ 8, ரூ 210-லிருந்துருபாய் 575 வரை ரூ. 10.

இந்தப் பஞ்சப்படி உயர்வால் இந்த ஆண்டு அரசுக்கு ரூ. 20.96 கோடியும், முழு ஆண்டில் ரூ. 35.93 கோடியும் அதிகப்படியாக செலவாகும்.

சுப்பிரமணியம்—துருக்கி மந்திரி பேச்சு

புதுடெல்லி, செப். 22—துருக்கி நாட்டு வர்த்தக அமைச்சர் அகமது டாம்கெல் டெல்லியில் நேற்று மத்திய தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. சுப்பிரமணியத்தை சந்தித்துப் பேசினார். இரு அமைச்சர்களும் சுமார் அரை மணி நேரம் பேச்சு வார்த்தை நடத்தினர்.

இரு நாடுகளும் பரஸ்பரம் அக்கறை கொண்டுள்ள விஷயங்கள் பற்றி அவர்கள் கருத்துக்களைப்பரிமாறிக்கொண்டனர். தற்போதைய வர்த்தக ஒப்பந்தம் இந்தியா, துருக்கி நாடுகளுக்கு இடையேயான கூட்டுறவை வளர்க்க உதவும் என்று இரு அமைச்சர்களும் நம்பிக்கை தெரிவித்தனர்.

சென்னையில் நாளைய நிகழ்ச்சிகள்

தமிழ்நாடு இந்து ஆலயப் பாதுகாப்பு கமிட்டி மாநில செயற்குழு கூட்டம்; கோவிந்த[illegible] நாயக்கன் [illegible] கரு. ஜார்ஜ் டவுன். காலை 9-30 மணி.

ஸ்ரீ தேவி[illegible] மாரியம்[illegible] கோயில் திருவிழா: கருணை தெய்வம் கருமாரி என்னும் நாடகம் நடைபெறும். தலைமை: ஆ. ராஜகோபால். அடையாறு சாஸ்திரி நகர். [illegible]வு 9 மணி.

தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மாநாடு இரண்டாம் நாள் நிகழ்ச்சி: பேசுவோர்: அமைச்சர் நெடுஞ்செழியன், எம். டி. [illegible]ந்தரவடிவேலு, மிர்ஜா அப்துல் மஜீத் சாகிப். நியூ காலேஜ் ராயப்பேட்டை. மாலை 4-30 மணி.

5 வருடத்தில் கார் உற்பத்தி இரட்டிப்பு

புதுடெல்லி, செப். 22—அடுத்த ஐந்தாண்டுகளில் நம் நாட்டில் [illegible] உற்பத்தி செய்யப்படும் கார்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரிக்கப்படும்.

இதற்காக கார் உற்பத்தி ஆலைகள் விரிவுபடுத்தப்படும். மேலும் கூடுதல் கார் உற்பத்தி செய்வதற்காக, புதிய நிறுவனங்கள் தொடங்க லைசென்சுகளும் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருந்த போதிலும், மத்திய அரசு, பொதுத்துறை[illegible] நபமகமான ஓரளவு குறைந்த விலைக்குக் கார்களைத் தயாரிப்பதற்கான திட்டத்தைத் திட்டுவதற்கான தீர்மானத்தைத் தாற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.

1978 ஆம் ஆண்டு இறுதியில் நம் நாட்டிற்கு சுமார் 1 லட்சம் கார்கள் தேவைப்படும். உள்நாட்டுக் கச்சாப் பொருட்களைக் கொண்டு வெளிநாட்டு மூலதனமின்றி, உள்நாட்டிலேயே கார்களை வடிவமைத்து உருவாக்கும் திறன் கொண்ட 11 தனியார் கம்பெனிகளுக்கு ஏற்கெனவே கார் உற்பத்திக்கு, முன் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டு விட்டன. இந்த நடவடிக்கையின் மூலம் பிற்கால காரத் தேவையைச் சமாளிக்க முடியும்.

1972ஆம் ஆண்டில் 40 ஆயிரத்து 39 [illegible] உற்பத்தி செய்த[illegible] இ[illegible]. 1971ஆம் ஆண்டில், 39 ஆயிரத்து 325 கார்களையும், 1970 ஆம் ஆண்டில் 35 ஆயிரத்து 829 கார்களையும் உற்பத்தி செய்தது. மேலும் நம் நாடு, 1972ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட திறனைவிட [illegible]9 ஜீப்கள், அதிகமாக, அதாவது 12589 ஜீப்களை உற்பத்தி செய்தது. 1971ஆம் ஆண்டில் 11 [illegible]ரத்து 58 ஜீப்களும், 1970 ஆம் ஆண்டில் 9 ஆயிரத்து 334 ஜீப்களும் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டன. 1972ஆம் ஆண்டில், 73 ஆயிரத்து 502 ஸ்கூட்டர்களும், 47 ஆயிரத்து 552 மோட்டார் சைக்கிள்களும் உற்பத்தி [illegible]யின. ஆனால் அந்த ஆண்டில் 67 ஆயிரம் ஸ்கூட்டர்களும், 35 ஆயிரம் ஸ்கூ[illegible]ட்டர்களும் உற்பத்தி செய்தால் போதும் என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

"பஸ் கட்டணம் உயர்வு இல்லை" மந்திரி அறிவிப்பு

வேலூர், செப். 22—அரசாங்க பஸ்களில் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது என்று போக்குவரத்து மந்திரி ராமச்சந்திரன் கூறினார்.

வேலூரில் அவர் [illegible]த்திரிகை நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

"பஸ்—கார் போன்றவற்று[illegible] தேவையான டீசல், பெட்ரோல், டயர் உதிரி உறுப்புகள் மற்றும் இதப் பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன.

இருந்தாலும், அரசாங்க பஸ்களில் [illegible]றைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. 1965-ம் ஆண்டுக்குப் பிறகு கட்டணம் உயர்த்தப்படவில்லை.

பஸ் கட்டணத்தை உயர்த்தும் எண்ணம் அரசுக்கு இல்லை. இந்த பிரச்னையை அரசாங்கம் தன் திறமையால் சமாளித்து வருகிறது.

பஸ்களில் நெருக்கடி இருந்தால் அதிக பஸ்கள் விடுவதற்கு [illegible]வட்ட ஆட்சித் தலைவருக்கு அனுமதி வழங்கப்பட்டு உள்ளது.

லட்சம் ரூபாயாக கிடைத்த வருமானம், இப்போது 10 லட்சம் ரூபாயாக அதிகரித்து இருக்கிறது.

சென்னை—திருவனந்தபுரம் சென்னை—ராமேசுவரம் ஆகிய ஊர்களுக்கு இடையே மின்னல் வேக எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடப்படும்.

[illegible] மைல் தூரத்துக்கு அதிகம் உள்ள எல்லா பஸ் "ரூட்"களும் இந்த ஆண்டுக்குள் நாட்டுடைமை ஆக்கப்படும்.

முக்கிய பஸ் நிலையங்களில் பிரயாணிகளுக்கு [illegible] வசதி செய்து கொடுக்கப்படும். இதன்படி ஓ[illegible]ல்கள் கடைகள் ஆகியவை[illegible] படும்.

என்றார் மந்திரி ராமச்சந்திரன்.

ராமேஸ்வரத்துக்கு அரசு பஸ்

அரசாங்க எக்ஸ்பிரஸ் பஸ்களில் மூன்று வாரத்துக்கு $4\frac{1}{2}$

நடிகை வகிதா ரகிமானுக்கு திருமணம்

புதுடெல்லி, செப். 22—இந்தி நடிகை வகிதா ரகிமானுக்கு அடுத்த நவம்[illegible]மாதத்தில் கல்யாண[illegible] நடக்கும்.

உத்திரபிரதேச லட்[illegible]பதியான டாக்டர் அகமது சத்திக் என்பவரை வகிதா [illegible]யாணம் செய்துகொ[illegible]கிறார். வகிதாவுக்கு வயது 34.

சென்ற ஆண்டில் வகிதாவுக்கு "பத்மஸ்ரீ" பட்டம் கிடைத்தது. சிறந்த நடிப்புக்காக ஊர்வசி தேசிய விருதையும் அவர் பெற்றார்.



"கண்மணி ராஜா" படத்தில் சிவகுமார், லட்சுமி.

திரை உலகம்

கை நிறைய காசு

அருணோதயா படநிறுவனத்தின் சார்பில் மின்னல் தயாரித்துவரும் படத்திற்கு "கை நிறைய காசு" என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

நாகேஷ், பிரமிளா ஜோடியுடன் வாசு, தேங்காய் சீனிவாசன், ஸ்ரீகாந்த், மவுலி, ஏ. சகுந்தலா, சச்சு, காஞ்சனா, எஸ். என். லட்சுமி முதலியோர் நடித்திருக்கின்றனர்.


மைசூர் பிரமியர் ஸ்டுடியோவில படப்பிடிப்பு நடந்து வருகிறது.

கவிஞர் கண்ணதாசன் பாடல்களுக்கு சங்கர்கணேஷ் இசையமைத்துள்ளார். அதில் ஒன்று!—

"காலம் என் பக்கம்
உனக்கும் காதல் என் பக்கம்
எனக்கும் வாழ்க்கை உன் பக்கம்
உன்னை நானறிவேன்
மலர்ந்த மேனியைப் பாருங்கள்
சிவந்த பூவினை பாருங்கள்
திறந்து தேவையைக் கூறுங்கள்
அதை நான் தருவேன்"

இப்பாடலை பி. சுசிலா பாட சென்ற வாரம் சாரதா ஸ்டுடியோவில் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

தர்மராஜனின் மூலக்கதைக்கு மவுலி திரைக்கதை வசனம் எழுதுகிறார். ஏ. பி. ராஜ் டைரக்ட் செய்கிறார்.



முருகு பிலிம்ஸ் படத்தில் தேங்காய் சீனிவாசன், ஷஸ்மா, சுருளிராஜன்.

'இனி குடிக்கமாட்டேன்' ராஜன் சபதம்

குடிவெறியினால் தனது அருமைத் தங்கையின் திருமணம் தடைபட்டு நிற்பதற்குத் தானே காரணமாகிறான் மாரிமுத்து. தங்கை மீனாட்சி மீது அளவற்ற பாசமுள்ள அவன் இந்த தவறை செய்யக் காரணம் அந்தப் பாழும் குடிதான். மனமுடைந்து ஆத்திரமடைந்த அவனது தந்தை வீட்டை விட்டே மாரிமுத்துவைத் துரத்திவிடுகிறார்.

துக்கம் தொண்டையை அடைக்க வேதனையுடன் மாரிமுத்து அம்மன் கோவிலுக்கு வருகிறான்.

தன் மனக்குமுறலை தெய்வத்திடம் கொட்டித் தீர்க்கிறான்.

"மீனா கல்யாணத்தை என் குடி வெறி நிறுத்திடிச்சு" இனிமே என் ஆயுளுக்கும் நான் குடிக்க மாட்டேன் தாயே! நானே கஷ்டப்பட்டு உழைச்சு பணம் சம்பாதிச்சு என் தங்கைக்கு திருமணம் செய்யணும். என்னை வீட்டை விட்டுத் துரத்திய என் அப்பாவே என்னிடம் ஓடிவந்து "நீதான் என் மகன்" என்று சொல்லணும், அதுவரை வீடு திரும்பமாட்டேன்" என்று அம்மனின் முன்னால் நின்று சபதம் செய்கிறான்.


இக்காட்சி ராஜரத்னாவின் "பாச தீபம்" படத்திற்காக ஏவி. எம். ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

மாரிமுத்துவாக ஏவி. எம். ராஜனும் அவரது தங்கை மீனாட்சியாக நிர்மலாவும் நடித்தனர்.

மற்றும் மஞ்சுளா, ஸ்ரீகாந்த், சசிகுமார், தேங்காய் சீனிவாசன், குமாரி சச்சு, ஆகியோர் நடிக்கின்றனர்.

ஜி. சீனிவாசன் கதை வசனம் எழுதுகிறார்.

பட்டு டைரக்ட் செய்கிறார்.



"சென்னையில் எமதர்மன்"

"சென்னையில் எமதர்மன்" என்ற நகைச்சுவை நாடகம் தாம்பரம் ரங்கநாதபுரம் கற்பக விநாயகர் அரங்கத்தில் விநாயகர் நாடக மன்றத்தின் சார்பில் நடைபெற்றது.

கதை வசனம் எழுதியது டன் வில்லியாக நடித்த குமார் வசனத்தைத் தெளிவாகப் பேசி நன்கு நடித்துப் பாராட்டைப் பெற்றார்.

மற்றும் கங்கா, கமலா சனன், ஜனார்த்தனம், ராமலிங்கம் பிரபாகரன் மற்றும் பலர் நடித்தனர்.

கல்லூரி மாணவர்கள் இதில் முழுமையாகப் பங்கேற்றுக் கொண்டனர். நாடகத்தில் இப்படி ஆங்கிலம் அதிகமாகக் கலந்து எழுதுவது தேவை தானா? அதுவும் மாணவர்கள் நடிக்கும் நாடகத்தில அவசியம்தானா? இதை சிந்தித்து செயல்பட்டிருந்தால் நாடகம் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

காரைக்குடி நாராயணன் 8 படங்களுக்கு வசனம் எழுதுகிறார்

நாடக உலகம் மூலம் திரையுலகிற்கு அறிமுகமான இளம் கதாசிரியர் காரைக்குடி நாராயணன். "சொந்தம்" படம் திரையுலகிற்கு அவரை சொந்தமாக்கியது.

அவர், விசாலாட்சி கம்பைன்சாரின் "தீர்க்க சுமங்கலி," நகாதரவின் "... தா," ராஜாஜியின் "திக்கற்ற பார்வதி," சேதுமாதவனின் "வாழ்வே மாயம்" சுதாசன் எண்டர் பிரைசின் "பெண் குலத்தின் பெருமை," ஜெனரல்பிக்சர்ஸ் அமுதம்பிக்சர்ஸ் கண்ணன் பிலிம்ஸ் தயாரிக்கும் பெயரிடப்படாத படங்களுக்கும் காரைக்குடி நாராயணன் வசனம் எழுதுகிறார்.

ரவிச்சந்திரன் சென்ற கார் நிர்மலா வண்டி மீது மோதல்

கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் வேணு காரில் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறான். வரும் வழியில் பாலைகளை ஏற்றிக் கொண்டு மீனா வண்டியில வருகிறாள். அவளது வண்டி மீது வேணுவின் கார் மோதி விடுகிறது.

இதனால் வேணு வீட்டிற்குத் தாமதமாக வந்து சேரும் நிலைமை ஏற்படுகின்றது.

"என்னப்பா லேட்..." என்று அத்தை கல்யாணி கேட்கிறாள்.

"அதை ஏன் அத்தை கேட்கிறீங்க. வாற வழியில ஒரு சக்ரதாரி கதைய நடந்து போச்சு" என்று கூறுகிறான் அவன்.

"என்னப்பா சக்ரதாரிக் கதை? கொஞ்சம் சொல்லுப்பா" என்று அவனுடைய தாத்தா ராமலிங்கம் கேட்கிறார்.

"நான் சொல்கிறேன்" என்று அப்போது அங்கே வந்த மீனா குறுக்கிட்டுக் கூறுகிறாள்.

"என் பேரன் கிட்டே கதை கேட்டா நீ சொல்றேனங்கிறியே! உனக்கென் படித் தெரியும்?" என்கிறார் ராமலிங்கம்.

"சக்ரதாரி கதை நடந்தது என் வண்டி மேலே உங்க பிள்ளை மோதினதால தாம்ன! உங்க மருமகப்பிள்ளை வழி ஏத்ரியாமே வந்து என் வண்டியில மோதி என் வண்டியைக் கீழே சாய்ச்சிட்டாரும்மா" என்கிறாள் மீனா.

இக்காட்சி ரவிப் பிரியாவின் 'அவளுக்கு நிகர் அவளே' படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

வேணுவாக ரவிச்சந்திரனும், மீனுவாக நிர்மலாவும் கல்யாணியாக புஷ்பலதாவும் ராமலிங்கமாக எஸ். வி. ராமதாசும் நடித்தனர்.

ஏவி. எம். ராஜன் முக்கிய வேடம் ஒன்றில் நடிக்கிறார்.

கதைவசனம்எழுதி மதுரை திருமாறன் டைரக்ட் செய்கிறார்.

முத்துராமன் எழுதிய காதல் கடிதம்



மாணிக்கம தன் காதலி தங்கத்தை மணந்து கொள்ள பணம் சேர்க்கப் பட்டணம் செல்கிறான். தன்னைப் பிரிந்து செல்லும் காதலனிடம் அடிக்கடி தனக்குக் கடிதம் எழுதும்படி தங்கம் கேட்டுக் கொள்கிறாள்.

ஒவ்வொரு நாளும் தன் காதலன் மாணிக்கத்திடமிருந்து கடிதத்தை எதிர்பார்த்து கொண்டிருக்கிறாள்.

மாணிக்கமும் வேலைகிடைத்தவுடன் தன் காதலிக்கு ஒரு கடிதம் எழுதுகிறான். ஆனால் எதிர் பாராத விதமாக அந்தக் கடிதம் தங்கத்தின் தந்தையின் கையில சிக்கி விடுகிறது. அவர் கடிதத்தைப்பிரித்து படிக்கும்போது தங்கம் பார்த்து விடுகிறாள்.

"யாருக்கப்பா கடிதம்" என்கிறாள் ஆவலோடு.

"எனக்குத் தாம்மா...! என்னிடம் கடன் வாங்கிய ஒரு கடன்காரன் அசலையும் சாப்பிடப் பார்க்கிறானம்மா!" என்று சொல்லிவிட்டு அந்தக் கடிதத்தை கிழித்துப் போட்டு விடுகிறார்.

இக்காட்சி கீதாலயாவின் "மல்லிகைப்பூ" படத்திற்காக படமாக்கப்பட்டது.

மாணிக்கமாக முத்துராமனும், தங்கமாக பிரமிளாவும் தந்தை செல்வநாயகமாக வ. ராகவனும் நடித்தனர்.

மற்றும் கே. ஆர். விஜயா, ஸ்ரீகாந்த், சோ, மனோரமா, தேங்காய்சீனிவாசன், மூர்த்தி சுகுமாரி, ஆகியோர் நடிக்கின்றனர்.

வாலியின் பாடல்களுக்கு வி. குமார் இசையமைக்கிறார்.

என். எஸ். மணியம் கதை வசனம், எழுதி டைரக்ட் செய்கிறார்.

போலீஸ் ஸ்டேஷனில் சோ

... ஆறுமுகத்தை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து போலீஸ் இன்ஸ்பெக்டரும், ஏட்டும் விசாரித்துக் கொண்டிருக்கின்றனர்.

வகையாகக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து கேட்க வேண்டிய கேள்விகளை ...


"சார்... என்னை கேள்வி மேலே கேள்வி கேட்காதீங்க? ஸ்மக்ளிங் பற்றி எனக்கு ஒரு அளவுதான் தெரியும், அளவுக்கு மேலே கேட்டா உளறினாலும் உளறிடுவேன்!" என்கிறான் ஆறுமுகம்.

"ஸ்மக்ளிங் ஆறுமுகத்துக்கு ஸ்மக்ளிங் பற்றித் தெரியாதா?" என்றபடி முதுகில் ஒன்று வைக்கிறார் இன்ஸ்பெக்டர்.

அந்த சமயத்தில்—

"சார்... சார்... எல்லாரும் வந்தாச்சு...! முகூர்த்த வேளை நெருங்கிடுச்சு, நீங்க வந்தா கட்டிப்பிடலாம் தாலியை" என்கிறார் கான்ஸ்டபிள்.

"ஓகோ... ஐயாவுக்கு ...



... ஆறுமுகம் "கல்யாணம்... என் தங்கச்சிக்கு... அய்யா தலைமையிலே தான் நடக்குது. அரைகுறையா சேதியைக் கேட்டுகிட்டு கண்டபடி உளறாதே!" என்று அதட்டுகிறார் கான்ஸ்டபிள்.

இக்காட்சி வசந்த மூவிசாரின் "மனிதரில் மாணிக்கம்" படத்திற்காக ஏவி. எம். ஸ்டுடியோவில் படமாக்கப்பட்டது.

ஸ்மக்ளிங் ஆறுமுகமாக சோவும், கான்ஸ்டபிளாக சுருளிராஜனும், இன்ஸ்பெக்டராக ஜம்புவும், ஏட்டாக கே. எஸ். சீதாராமனும் நடித்தனர்.

சி. வி. ராஜேந்திரன் டைரக்ட் செய்தார்.



'நத்தையில் முத்து' படத்தில் கே. ஆர். விஜயா.

அசோகன் வைத்த விருந்தில் ஜெய்சங்கர் கலாட்டா



அசோகன் அக்கிரமச் செயல்களைச் செய்வதற்கு ... குறுக்கே நிற்கிறார் ஜெய்சங்கர்.

தன் ... எதிரியான ஜெய்சங்கரை சிவகுமார் ஒழித்துவிட்டார் என்ற செய்தி, அசோகனின் காதில் தேனைப் பாய்கிறது.

இப்படிப்பட்ட அரிய உதவி செய்த சிவகுமாருக்கு ஆடம்பரமாக ஒரு விருந்து ஏற்பாடு செய்தார் அசோகன்.

விருந்து நடைபெறுகிறது. சிவகுமாருக்கு மாலை அணிவித்து புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். அந்த சமயத்தில்

திடீரென்று பயங்கர ஓசை ஒன்று எழுகின்றது—விழா மண்டபமே அதிர்கிறது.

எல்லோரும் அதிர்ச்சியுடன் திரும்பிப் பார்க்கிறார்கள்.

மாளிகையின் கண்ணாடிச் சுவர்களை உடைத்துக் கொண்டு உள்ளே ஒரு



குதிரை பாய்ந்து வந்தது. அதன்மீது கம்பீரமாக அமர்ந்திருந்தார் ஜெய்சங்கர்.

அனைவரும் அதிர்ச்சியால் அசையாமல் நின்றனர்.

ஒழிந்துவிட்டதாக நினைத்த ஒருவன் உயிரோடு வந்துவிட்டானே என்று இமையாமல் பார்க்கின்றனர்.

இக்காட்சி விஜய சித்ரா பிலிம்சின் "எங்க பாட்டன் சொத்து" வண ணப்படத்திற்காகப் படமாக்கப்பட்டது.

கர்ணன் ஒளிப்பதிவு செய்து டைரக்ஷனைக் கவனிக்கிறார்.

தாய் பிறந்தாள்

ஜீவஜோதி மூவீஸ் பட நிறுவனத்தார் "தாய் பிறந்தாள்" என்ற பெயரில் சமூகப் படம் ஒன்றைத் தயாரித்து வருகின்றனர்.

பத்மஸ்ரீ பானுமதி, முத்துராமன், சாரதா, மனோகர், அசோகன், சி. ஐ. டி. சகுந்தலா, தேங்காய் சீனிவாசன், மனோரமா ஆகியோர் நடிக்கின்றனர்.

கதைவசனம் எழுதி ஏ. கே. ... மணியம் டைரக்ட் செய்கிறார்.

... எஸ். சேதுராமன் தயாரிக்கிறார். ஏவி. எம். மில் படப்பிடிப்பு நடந்துவருகிறது.

சகுந்தலாவிடம் அசோகன் கொஞ்சல்

அழகான கட்டில் ஒன்றில் ஒய்யாரமாக சகுந்தலா உட்கார்ந்திருந்தார். அவரது மடியில் படுத்தபடி கைகளைப் பிடித்துக் கொண்டு கொஞ்சினார் அசோகன்.

"உன் அழகை பாதுகாத்து வைத்திருக்கிறாய் எனக்காக!" என்று சிரித்தபடி கூறிக்கொண்டிருக்கும் போது கடுங் கோபத்துடன் சுந்தர்ராஜன் உள்ளே நுழைந்தார்.

"துரோகி சண்டாளி... எனக்கா துரோகம் செய்கிறாய்?" சுந்தர்ராஜன் ஆத்திரத்துடன் சத்தம் போடுகிறார்.

"தரித்திரத்தில் தர்ம சிந்தனை, வயோதிகத்தில் வீரம் சிலருக்கு வருவது வாடிக்கை" என்று அலட்சியமாகக் கூறுகிறார் சகுந்தலா.

"என்னைப் பார்த்துக் கேலியா செய்கிறாய்" சுந்தர்ராஜன் கத்தியை எடுத்துக் கொண்டு பாய்கிறார்.

குறுக்கே பாய்ந்த அசோகன் அவர் கரத்தைப் பிடித்து கத்தியைத் தட்டி விடுகிறார்.

"நான் இவளுக்கு முன்னவன், இவள் இதயத்தில் மன்னவன்." என்று கூறி அசோகன் ஏளனமாக சுந்தர்ராஜனைப் பார்த்துச் சிரிக்கிறார்.

இக்காட்சி கணேஷ் கிரியேஷன்ஸ் தயாரிக்கும் வண்ணப்படமான பாக்தாத் பேரழகி ... படமாக்கப்பட்டது ... ஒளிப்பதிவு ... டைரக்ட் செய்கிறார்.

"கை நிறைய காசு" படத்தில் பிரமிளா, நாகேஷ்.



இன்றைய சினிமா

சென்னை	
கபாலி	எங்கிருந்தோ வந்தாள்
காமதேனு	Zanjeer
சாரஸ்	Creatures the world forgot
நியூ எல்பின்ஸ்டன்	Mazhakkaru
நேஷனல்	பசு
ராம்	தெய்வக் குழந்தைகள்
தாம்பரம்	
எம். ஆர். தியேட்டர்	சூரியகாந்தி
ஸ்ரீசித்ரா	... சுற்றும் வாலிபன்
நேஷனல்	Super man
குரோம்பேட்டை	
வெற்றி	வீட்டுக்கு வந்த மருமகள்
வில்லிவாக்கம்	
ராயல்	பொன்னூஞ்சல்

Printed by S. V. G. Sowrirajulu at the M. G. P. P. S. Press, No. 4, South Bank Road, Madras-28, and Published by him for the Madras Co-operative Printing and Publishing Society Ltd.

Chief Editor: S. V. G. Sowrirajulu
Honorary Editor: N. Muthukumarasamy